# பத்திரிக்கை செய்தி

## தற்காலிக மின் இணைப்பு வழங்க லஞ்சம் வாங்கிய மலுமிச்சம்பட்டி, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மின்வாரியம் இளமின் பொறியாளர் மற்றும் போர்மேன் ஆகியோர் கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது

கோயம்புத்தூர் மாவட்டம் போத்தனூர் பாரத் நகரைச்சேர்ந்த காளியப்பன் என்பவரது மகன் திரு.கார்த்திகேயன் (புகார்தாரர்) என்பவர் மலுமிச்சம்பட்டி கிராமம் எம்.பி.ஜி நகரில் உள்ள தனது வீட்டு மனைக்கு தற்காலிக மின்இணைப்பு வேண்டி கடந்த 05.09.2022ஆம் தேதி மலுமிச்சம்பட்டி EB அலுவலகத்தில் ஆன்லைனில் விண்ணப்பத்திருந்தார். அதனை தொடர்ந்து புகார்தாரர் தனது விண்ணப்ப பதிவு சம்பந்தமாக அரசு கட்டணம் ரூ.2,818/-ஐ கடந்த 09.09.2022ஆம் தேதி ஆன்லைனில் செலுத்தியுள்ளார். மேற்படி விண்ணப்பத்தின்பேரில் புகார்தாரரின் மனையிடத்தில் மலுமிச்சம்பட்டி EB அலுவலர் கள ஆய்வு முடித்த பின்னர் புகார்தாரரின் மனையிடத்திற்கு அருகில் ஒரு மின்கம்பம் அமைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி மின் இணைப்பு சம்பந்தமாக புகார்தாரர் பலமுறை மேற்படி அலுவலகம் சென்றுள்ளார். மலுமிச்சம்பட்டி EB அலுவலரின் அறிவுரைப்படி அரசுக்கு செலுத்தவேண்டிய Estimation கட்டணம் ரூ.37,910/-ஐ கடந்த 19.09.2022ஆம் தேதி ஆன்லைனில் செலுத்தியுள்ளார். அதன்பிறகு புகார்தாரர் மலுமிச்சம்பட்டி EB அலுவலக இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன் என்பவரை கடந்த 16.11.2022ஆம் தேதி சந்தித்து மேற்படி மின் இணைப்பு குறித்து கேட்டபோது அவர் அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டது என்றும், மேற்படி மின் இணைப்பு வழங்குவதற்காக தனக்கு தனியாக பணம் கொடுக்கவேண்டும் என்றும், எவ்வளவு தொகை என்பதை பின்னர் தெரிவிப்பதாகவும் சொல்லியுள்ளார். இந்நிலையில் 19.11.2022ஆம் தேதி புகார்தாரர் அவரது சைட்டில் இருந்தபோது, மேற்படி அலுவலக போர்மேன் திரு.சங்கர்கணேஷ் என்பவர் புகார்தாரரிடம், மின் கம்பம் அமைத்து தற்காலிக மின் இணைப்பு வழங்க இளமின் பொறியாளர் திரு.சுப்ரமணியன் அவர்கள் கேட்க சொன்னதாக கூறி ரூ.7,000/-ம் லஞ்சமாக கேட்டுள்ளார். ஆனால் புகார்தாரர் தான் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் அனைத்தையும் ஏற்கனவே கட்டிவிட்டதாகவும், எதற்காக மீண்டும் பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டதற்கு போர்மேன் திரு.சங்கர்கணேஷ் என்பவர் இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன் அவர்கள்தான் கேட்கசொன்னதாக தெரிவித்து, பின்னர் அவரது போனிலிருந்து இளமின்பொறியாளரை தொடர்பு கொண்டு புகார்தாரரை பேச சொல்லி போனை கொடுத்துள்ளார். அப்போது புகார்தாரரிடம் பேசிய இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன், மேற்படி மின்இணைப்பு வழங்க ரூ.7,000/-ம் போர்மேனிடம் கொடுக்குமாறு சொல்லியுள்ளார். அதற்கு புகார்தாரர் தன்னிடம் அவ்வளவு பணம்

இல்லை என்றும், அதை குறைத்து கொள்ளுமாறு அவரிடம் கேட்டுள்ளார். அதற்கு அவர் புகார்தாரரிடம் ரூ.5,000/-ம் மட்டும் போர்மேன் திரு.சங்கர்கணேஷிடம் கொடுக்குமாறு சொல்லியுள்ளார். புகார்தாரர் தற்போது தன்னிடம் பணம் இல்லையென்று சொன்னதால், போர்மேன் திரு.சங்கர்கணேஷ் திங்கள்கிழமை மலுமிச்சம்பட்டி EB அலுவலகத்திற்கு வந்து கொடுக்குமாறு சொல்லியுள்ளார். ஆனால் புகார்தாரர் திங்கள்கிழமை EB அலுவலகம் செல்லாததால், அடுத்தநாள் ஆன்லைனில் அவரது விண்ணப்பத்தின் நிலை குறித்து பார்த்தபோது, புகார்தாரருக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டு விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கை முடிக்கப்பட்டதாக இருந்ததை பார்த்துவிட்டு அன்றையதினம் மாலை மலுமிச்சம்பட்டி EB அலுவலகம் சென்று மேற்படி ஆன்லைனில் பார்த்த விபரம் குறித்து விசாரித்துள்ளார். அப்போது அங்கிருந்த இளமின் பொறியாளர் திரு.சுப்ரமணியன் “ஆன்லைனில் நாங்க அப்படித்தான் update பண்ணுவோம் என்றும், கேட்டப் பணம் கொடுத்தால் தான் மின் இணைப்பு வழங்குவோம்” என்றும் கராராக கூறியுள்ளார். அதனால் அப்போதைக்கு சரியென்று சொல்லிவிட்டு வந்த புகார்தாரர், தனது வீட்டு மனைக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்க ரூ.5,000/- லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால், அவர் கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையில் இன்று 24.11.2022-ம் தேதி புகார் கொடுத்தார். மேற்படி புகாரின்பேரில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில் லஞ்ச ஒழிப்புத்துறையினரின் ஆலோசனையின்படி, புகார்தாரர் இன்று இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன் அவர்களை சந்திக்க மலுமிச்சம்பட்டி EB அலுவலகம் சென்றுள்ளார். அப்போது அங்கிருந்த போர்மேன் திரு.சங்கர்கணேஷ் இளமின்பொறியாளர் வெளியே சென்றிருப்பதாகவும், இப்போது வந்துவிடுவார் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன் அவர்களிடமிருந்து திரு.சங்கர்கணேசுக்கு போன்வந்ததது. திரு.சங்கர்கணேஷ் புகார்தாரர் வந்துள்ள விபரத்தை இளமின்பொறியளரிடம் தெரிவித்துள்ளார். அப்போது இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன் புகார்தாரரிடம் ரூ.5000/- வாங்கி வைக்கும்படியும் தான் அலுவலகத்திற்கு வந்துவிடுவதாகவும் தெரிவித்துள்ளார். அதன்படி புகார்தாரரிடம் லஞ்சமாக ரூ.5,000/-ஐ போர்மேன் திரு.சங்கர்கணேஷ் வாங்கியபோது மறைந்திருந்த கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களால் திரு.சங்கர்கணேஷ், போர்மேன் கைது செய்யப்பட்டார். அப்போது அங்கு வந்த இளமின்பொறியாளர் திரு.சுப்ரமணியன், அவர்களையும் விசாரித்து கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**JUNIOR ENGINEER AND FOREMAN, MALUMICHAMPATTI, TANGEDCO ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE BRIBE FOR ISSUING TEMPORARY EB CONNECTION**

On 05.09.2022 the complainant Tr.Karthikeyan, S/o Kaliappan, residing at Coimbatore District had applied for temporary Electricity connection for his residential plot at Malumichampatti Village, MPG Nagar through online at Malumichampatti EB Office. In this regard he paid Rs.2,818/- for application fee on 09.09.2022. After completion of field verification by Malumichampatti EB officials, the complainant was informed that one new EB pole has to be erected near complainants land. Later, Complainant had approached EB office several times but connection was not given. On the advice of Malumichampatti EB official, the complainant again paid estimation amount of Rs.37,910/- through online on 19.09.2022. Then complainant met Tr.Subramanian, Junior Engineer on 16.11.2022. The Junior Engineer had informed the complainant that all formalities had been completed, but the complainant has to give Tr.Subramanian, money separately and informed that he would tell the amount later. On 19-11-2022 EB Foreman Tr. Shankar Ganesh met the complainant and informed that Tr.Subramanian, Junior Engineer had demanded Rs.7,000/- as bribe for him for providing EB connection. The foreman made the complainant to speak with the Junior engineer over

mobile phone. The Complainant requested the Junior Engineer that he did not have so much money for which the Junior Engineer reduced the amount of Rs.7,000/- to Rs. 5,000/- and instructed the complainant to come to office on Monday and give the money to the Foreman. The Complainant did not go to the EB office on Monday and the next day when the complainant checked the online status of his petition, the status showed that the connection had been given. When the complainant went and enquired about the matter, the Junior Engineer rudely demanded to give Rs.5,000/- to him as bribe and otherwise the EB connection would not be given. The complainant not willing to give bribe, approached Vigilance & Anti – Corruption, Coimbatore Detachment, and gave complaint. In this connection a case was registered and a trap was organized today 24.11.2022. During the trap proceeding on the instruction of Tr.Subramanian, Junior Engineer, Tr.Sankarganesh, Foreman reiterated the earlier demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. Both the accused were arrested.